செய்தி வெளியீடு எண் :17 நாள் :17.08.2020

## தொழில் நிறுவனங்கள் உத்யம் இ–பதிவு செய்ய

## தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு

தேனி மாவட்டத்தில் செயல்பட்டு கொண்டிருக்கின்ற உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் ‘‘உத்யம் பதிவு’’ செய்து மாநில அரசு சலுகைளை பெற்றுக் கொண்டு தேனி மாவட்டத்தை தொழில் மாவட்டமாக முன்னேற்றம் காண வருமாறு தேனி மாவட்ட ஆட்சி தலைவர் தெரிவித்துள்ளார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அரசிதழ் எண். SO 2119 (E)நாள்26.06.2020ன்படி குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதிய வகைப்பாடு (Classification) வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி

**1)** ‘‘குறுந்தொழில் “ என்பது நிறுவனத்தின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பு ரூ.1 கோடிக்கு மிகாமலும் மற்றும் ஆண்டு விற்பனை முதல் (Turn over) ரூ.5 கோடிக்கு மிகாமலும் உள்ள தொழில் நிறுவனங்கள்.

**2.** ‘‘சிறுதொழில்’’ என்பது நிறுவனத்தின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பு 10 கோடிக்கு மிகாமலும், மற்றும் ஆண்டு விற்பனை முதல் (Turn over) ரூ.50 கோடிக்கு மிகாமலும் உள்ள தொழில் நிறுவனங்கள்.

**3.** ‘‘ நடுத்தர தொழில்’’ என்பது நிறுவனத்தின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பு ரூ50 கோடிக்கு மிகாமலும், ஆண்டு விற்பனை முதல் (Turn over) ரூ.250 கோடிக்கு மிகாமலும் உள்ள தொழில் நிறுவனங்கள் என்று புதிய வகைப்பாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்யம் பதிவு (UDYAM REGISTRATION): ஏற்கனவே நடைமுறையில் உள்ள உத்யோக் ஆதார் பதிவறிக்கை (Udyog Aadhaar Memorandum) 30.06.2020 உடன் விலக்கி கொள்ளப்பட்டு 01.07.2020 முதல் உத்யம் பதிவறிக்கையினை குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இணைய வழியாக பெற்றுக் கொள்ள வேண்டும். தொழில் முனைவோர் பதிவு குறிப்பாணை பகுதி–2 (EM Part-II) மற்றும் உத்யோக் ஆதார் பதிவறிக்கை ( Udyog Aadhaar Memorandum) பெற்றுள்ள அனைத்து நிறுவனங்களும் உத்யம் பதிவு (UDYAM REGISTRATION) பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். இருப்பினும் ஜுன் 2020 வரை பெறப்பட்ட உத்யோக் ஆதார் பதிவுகள் 31.03.2021 வரை செல்லதக்கதாகும்.

ஒரு நிறுவனம் பல கிளை நிறுவனங்கள் இருந்தாலும் ஒரு உத்யம் பதிவு தான் மேற்கொள்ள முடியும். அந்நிறுவனத்தின் பல்வேறு உற்பத்தி சேவை தொழில் நிறுவனங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு(Clubbing) வகைப்படுத்தப்பட்டு ஒரு உத்யம் பதிவு (UDYAM REGISTRATION) தான் பெற அனுமதிக்கப்படும். தவறான விவரங்கள் அளித்து உத்யம் பதிவு மேற்கொண்டால் அந்நிறுவனத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் உத்யம் பதிவு www.udyamregistration.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம். பதிவு கட்டணம் ஏதும் இல்லை. சான்றிதழ் பெறுவதன் மூலம் மத்திய மாநில அரசின் மான்யம் பெற்றுக் கொள்ளவும், மின் இணைப்பில் முன்னுரிமை விகிதப்பட்டி சலுகை, வங்கியால் முன்னுரிமை மற்றும் வட்டி சலுகைகள் பயன் பெறலாம்.

எனவே தேனி மாவட்டத்தில் உள்ள குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உடனடியாக உத்யம் பதிவு செய்து சான்று பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தேனி அலுவலகத்தினை அணுகுமாறு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.